**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 78 of 2023**

**04.09.2025**

**PW1 – திரு. சிவாஜி**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் 2021ம் வருடம் பணியிலிருந்து விருப்பஓய்வு பெற்றேன். நான் கடைசியாக வாங்கி மாதசம்பளம் ரூ.42,240/–. என்னுடைய அடிப்படை சம்பளம் ரூ.43,400/– என்றால் சரிதான். ஈட்டியவிடுப்புக்கான தொகை மனுவில் எவ்வளவு கோரியுள்ளேன் என்று தெரியாது. ஈட்டியவிடுப்புக்கான தொகை ரூ.2,60,756/– காசோலை எண்.216021, 13.03.2021லிலேயே எனக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். ஈட்டியவிடுப்புக்கான வித்தியாசத்தொகையை தவறான கணக்கீட்டின் அடிப்படையில் கேட்டுள்ளேன் என்றும் சரியான கணக்கீட்டின் அடிப்படையில் தொகை வழங்கப்பட்டுவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. விடுப்பு ஒப்படைப்புத்தொகை மனுவில் எவ்வளவு கோரியுள்ளேன் என்று தெரியவில்லை.

2009, 2016, 2017 வருடங்களில் நான் வாங்கிய சம்பளம் எவ்வளவு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2009, 2016, 2017ல் வாங்கிய சம்பளத்தொகைப்படி விடுப்பு ஒப்படைப்புத்தொகை ரூ.46,191/– தொகை மட்டும் தரவேண்டும் என்றால் சரியல்ல. விருப்ப ஓய்வு ஈட்டுத்தொகையாக மனுவில எவ்வளவு கேட்டுள்ளேன் என்று தெரியவில்லை. விருப்ப ஓய்வு ஈட்டுத்தொகை ரூ.23,958/– 26.10.2023லிலேயே கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் ஞாபகம் இல்லை.தவறான கணக்கீட்டின் அடிப்படையில் ரூ.25,000/–த விருப்பஓய்வு ஈட்டுத்தொகை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அகவிலைப்படி நிலுவைத்தொகை எவ்வளவு கோரியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. மனுவில் ரூ.16,077/– தொகை தவறாக கணக்கிட்டு கேட்டுள்ளேன் என்றால்

சரியல்ல. ரூ.13,339/- தொகை மட்டும் தரப்படவேண்டும் என்றால் சரியல்ல. ERBS தொகை ரூ.18,500/- வாங்கிவிட்டேன். ஊதியஒப்பந்தப்படி நிலுவைத்தொகை எதுவும் எனக்கு வரவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் முன்கூட்டுத்தொகை எதுவும் வாங்கவில்லை.

சென்ற வருடம் டிசம்பர் மாதம் வாங்கிய பென்சன் தொகை ரூ.22,365/- என்றால் சரிதான். அதற்கு முன்பு ரூ.19,000/- வாங்கினேன். சென்ற மாதம் ரூ.27,000/- மற்றும் சிறு தொகை பென்சன் வாங்கினேன். அகவிலைப்படி தற்போது உயர்த்தி கொடுத்ததால் பென்சன் தொகை கூடுதலாக வருகிறது என்றால் சரிதான். நான் பணிஓய்வு பெற்ற சமயத்தில் அகவிலைப்படி எவ்வளவு என்று ஞாபகம் இல்லை. என்னுடன் பணிஓய்வு பெற்றவர்களுக்கு அகவிலைப்படி எவ்வளவு கணக்கிடப்பட்டது என்றால் அன்றைய தினம் நான் மட்டும்தான் விருப்பஓய்வு பெற்றேன். நான் பணிபுரிந்த சமயத்தில் தொழிலாளர்களுக்கு எவ்வளவு அகவிலைப்படி கண்க்கிடப்பட்டதோ அதன்படிதான் அகவிலைப்படி எனக்கும் கணக்கிடப்பட்டது என்றும் நான் மட்டும் தவறான கணக்கீட்டின் அடிப்படையில் தொகை கோருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கொடுக்கவேண்டிய நிலுவைத்தொகைகளை நிர்வாகம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது சம்பளத்தொகையை அதிகப்படியாக கணக்கிட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவப்படி நான் பணிசெய்த காலத்தில் ரூ.100/- பெற்றேன். என்னுடைய மனுவில் மருத்துவப்படி ரூ.300/- என கணக்கிட்டு சொல்லியுள்ளேன். அது தவறு என்றால் நான் ரூ.200/- சேர்த்து கணக்கிட்டு கோரியுள்ளேன். மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem